வேண்டிவரும். அதனால் அது வேண்டாம். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் திரும்பத் திரும்ப பேசும்போது நீங்கள் அவருக்கு ஒரு* ruling *கொடுத்தீர்கள். ஆளுநரைப் பற்றி அவையில் விவாதங்கள் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்ற மரபு இருக்கின்றது. ஆகவே, அதை நீங்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஏற்கெனவே சொல்லப்பட்ட அந்த* ruling-*க்கு சபையின் உறுப்பினர்கள், அமைச்சர்கள் உட்பட மரியாதை தர வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில், நல்ல நோக்கில் மரபின்படி அனைவரும் நடக்க வேண்டும் என்று அனைத்து உறுப்பினர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் நான் அன்பான வேண்டுகோளை விடுக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவ்வளவுதான், அதனை விட்டுவிடுங்கள்.*

முற்பகல் 11-30

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சென்னை மாநகராட்சிச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2018 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2018 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன், என்ன சொல்லுங்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடு) சட்டத் திருத்தத்தை ஆதரிக்கிறீர்களா? எதிர்க்கிறீர்களா? இரண்டே வரிகளில் சொல்லிவிட்டு உட்காருங்கள்.*

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி அலுவலருடைய பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆரம்ப நிலையிலேயே நாங்கள் எதிர்க்கிறோம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, உங்கள் கருத்தைப் பதிவு செய்துகொள்கிறேன், அவ்வளவுதான். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி அலுவலரினுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பது கூடாது, தவறு என்று காங்கிரஸ் கட்சியின் சார்பாக பதிய வைக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சிப் பணிகளெல்லாம் தொய்வடைகின்ற நிலையில் மீண்டும் தனி அலுவலரினுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பது என்பது உகந்ததல்ல. இதை ஆரம்ப நிலையிலேயே இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக எதிர்க்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஆ) தமிழ்நாடு வேளாண் விளைபொருளை சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளை சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளை சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகள் பதிவு செய்யப்படுகின்றன. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(இ) தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*